# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter

## குருதீபம்
## ගුරුදීපම
## Gurutheepam

பெப்ரவரி - 2022 இதழ் - 34






## பீடாதிபதியின் செய்தி

குருதீபம் இதழ் - 34 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் யாவும் மிகச் சிறப்பான முறையில் எந்த விதமான தடங்கலும் இல்லாமல் நடைபெற்று வருவதில் கல்லூரியின் பீடாதிபதி என்ற வகையில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கொரோனாத் தொற்றிற்கான தடுப்பு நிலையமாகவும் சிகிச்சை நிலையமாகவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது பயன்படுத்தப்பட்டு ஏறக் குறைய 15 மாதங்களின் பின்னர் மீள எம்மிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பத்தில் ஏராளமான துப்புரவாக்கும் பணிகளும் சீர் செய்யும் பணிகளும் எம்முன்னே விரிந்து கிடந்து திகைக்க வைத்தபோதும் எமது கல்லூரியின் பணியாளர்கள், சுகாதாரத் தரப்பினர் மற்றும் இராணுவத்தினர் அனைவரும் ஒன்று திரண்டு அவரவர்கள் தனியாகவும் குழுவாகவும் செயற்பட்டு அளப்பரிய சேவையாற்றி கல்லூரியை பழைய நிலைக்குக் கொண்டு வந்துள்ளனர். இப்பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் இச்சமயத்தில் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 22.01.2022 மாணவ ஆசிரியர்கள் தமது பயிற்சிகளுக்காக மீளவும் கல்லூரிக்கு அழைக்கப் பட்டனர். இவ்வேளையிலும் மாணவ ஆசிரியர்களினதும் கல்லூரிச் சமூகத்தினரும் பாதுகாப்புக் கருதி பல்வேறு சுகாதார நடவடிக்கைகளையும் முன்னேற்பாடுகளையும் நாம் செய்திருந்தோம். இறைவனின் அருளால் மாணவ ஆசிரியர்கள் எந்த விதமான பாரிய பிரச்சினைகளும் இன்றி தமது பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

சுகாதார நடைமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மாணவ ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அடுத்து வருகின்ற மாதங்களில் இம்மாணவ ஆசிரியர்களை உள்ளகப் பயிற்சிக்காகப் பாடசாலைகளுக்கு இணைக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே கற்பித்தல் பயிற்சி மற்றும் மாணவ ஆசிரியர்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகள் தொடர்பாகவே கூடிய கவனம் எடுத்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவ ஆசிரியர்களைக் கல்லூரிக்கு உள்வாங்கி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சில விமர்சனங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆயினும் இவ்விமர்சனங்களும் சவால்களும் மாணவ ஆசிரியர்களின் நலன் கருதியே எழுப்பப்பட்டன என்பதை உணர்ந்து எமது கல்லூரியின் விரிவுரையாளர்கள், கல்வி சாராப் பணியாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து 'சவால்களே சந்தர்ப்பங்கள்' என்ற இந்த வருடத்திற்கான எமது மகுட வாக்கியத்திற்கமைவாக சிறப்பாகச் செயற்பட்டதன் விளைவாக மாணவர்களது பயிற்சியானது எந்த விதமான தடங்கல்களும் இல்லாமல் தொடர்ந்து நடந்து வருகின்றது.

இவ்வனைத்து செயற்பாடுகளும் வெற்றிகரமாக நடை பெறுவதற்கு விரிவுரையாளர்கள், கல்வி சாராப் பணி யாளர்களின் அர்ப்பணிப்பான சேவையும் மாணவ ஆசி ரியர்களின் ஒத்துழைப்புக்களுமே காரணமாக அமைந்தன. அவர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் கல்லூரியின் பீடாதிபதி என்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் தொடர்ந்தும் எமது செயற்பாடு களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு இறையாசியையும் வேண்டி விடை பெறுகின்றேன்.

நன்றி.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் குருசேத்திரம் குழுமத்தின் செயற்பாடுகளை சிலாவகித்துப் பேசிய கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகத்தின் உயரதிகாரிகள் குழாமுடன் கல்லூரியின் பீடாதிபதி...**



This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd February 2022

### போசகர்

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

### ஆலோசகர்கள்

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்
திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

### பிரதம ஆசிரியர்

திரு.ம.நிரேஸ்குமார்

### இணை ஆசிரியர்கள்

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

### வெளியீடு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk


## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தைப்பொங்கல் - 14.01.2022





## கொரோனா வைத்திய நிலையமாக சமூகப் பணிக்கு உதவிய கல்லூரியை பழைய நிலையிலேயே மீள ஒப்படைத்ததற்காக நன்றி செலுத்திய கல்லூரிச் சமூகம்...













## 15 மாத கால இடைவெளியின் பின்னர் மாணவ ஆசிரியர்கள் கல்லூரியில் கால் பதித்தனர் - 22.01.2022











## பிள்ளைகளைக் கண்ட தாயின் பரிவுடன் பணியாற்றும் சமையலறைப் பணியாளர்கள்...





## விவசாயப் திணைக்களத்தின் உதவியுடன் தாவரக் கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கைப் பசளை தயாரிப்பில்...







## சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாணத்திற்கான வருகைக்கான 125வது வருட நினைவு நாள் நிகழ்ச்சிகள் கல்வியியற் கல்லூரியில் - 28.01.2022










## அரிமா கழகத்தினால் (Lion Club) பயன் தரு மரக் கன்றுகள் அன்பளிப்பு - 03.01.2022







## இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையை (SLTES) சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வு







This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd February 2022

## அலுவலக உத்தியோகத்தர் திருமதி நிரோஜா சுபாகரன் இடம்மாற்றம் பெற்றுச் செல்வதையொட்டி கல்லூரிச் சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பிரிவுபசார விழா











## கல்லூரியின் பீடாதிபதியின் பிறந்த தினத்தில் மாணவ ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்...







## உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களின் பயன் பாட்டிற்காக வழங்கப்பட்ட மடிக்கணினிகளை மாணவ ஆசிரியர்கள் மீளவும் ஒப்படைத்தனர்...





This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd February 2022

## மாணவ ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல்கள்...









## 19ம் அணி மாணவ ஆசிரியர்களுக்கான கற்பித்தல் பயிற்சி மேற்பார்வைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன...











This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd February 2022

## 20ம் அணி மாணவ ஆசிரியர்களின் திசைமுகப்படுத்தல் இறுதிநாள் கலை நிகழ்ச்சிகள் - 03.01.2022




20ம் அணி மாணவ ஆசிரியர்களுக்கான திசைமுகப் படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நிகழ்நேர முறையில் பூர்த்தி செய்யப்பட்டு இறுதி நாள் கலை நிகழ்ச்சிகள் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேரடியாகவும் zoom தொழிநுட்பத்தின் வாயிலாகவும் நடைபெற்றது,

## கல்லூரி பிரதான மண்டபத்தில் நீண்ட நாட்களின் பின்னர் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் ஒன்று....



நீண்டகால இடைவெளியின் பின்னர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எமது மாணவ ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. கல்லூரி சமூகத்தினர் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்தினர்.

## அறிவாகி நிஜமாகி தொடர் நிகழ்ச்சிகள் 21, 22 மற்றும் 23...










This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd February 2022